முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.6.2024) தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டம், சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் திருவிழாவை முன்னிட்டு 18 ஆண்டுகளுக்குப் பிறகு 21.6.2024 அன்று தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றதையொட்டி ஊஞ்சனை நாட்டைச் சேர்ந்த இராமசாமி, அருணாசலம், கண்டதேவி ஊராட்சியைச் சேர்ந்த அ. முருகன், மு. ராஜ்குமார், கே.ஆர். கேசவமணி, செம்பொன்மாரியைச் சேர்ந்த கரு. ராமசாமி, முரசொலி, தென்னிலை நாடு – எழுவன்கோட்டையைச் சேர்ந்த செந்தில்நாதன், முடியரசன், வீரகுமார், கண்ணங்கோட்டைச் சேர்ந்த கணேஷ்குமார், இரவுசேரி நாட்டைச் சேர்ந்த பாலமுருகன், ரகுநாதன், கார்த்திகேயன், கதிர். செந்தூர், கோயில் குருக்கள் தாஸ் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.6.2024) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி 2024-2025 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.6.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் 2024-2025 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.6.2024) தலைமைச் செயலகத்தில், சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 2024-2025ஆம் ஆண்டிற்கான சட்டத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.6.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 2024-2025 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.6.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 2024 -2025 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தேவையான இடங்களில் – 2 ஆண்டுகளில்

தடுப்பணைகள் கட்ட விரைந்து நடவடிக்கை!

பேரவையில் அமைச்சர் துரைமுருகன் உறுதி!

சென்னை, ஜூன் 26- தமிழக சட்டப்பேரவையில் பல்வேறு உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக் கையில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்ட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்.

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப் பிட்ட தாவது:-

ஆத்தூர் பெத்தநாயக்கன் பாளையம் வடக்கு ஒன்றியம், வில்வனூரில் உள்ள வசிஷ்ட நதி யின் குறுக்கே தடுப்பணை அமைப்பதற்கு முதல் நிலை ஆய்வு செய்ததில், இத்திட்டத் தளம் தடுப்பணை அமைக்க ஏது வாக உள்ளது. இது நிலத்தடி நீர் உறிஞ்சுதல் வகைப்பாட்டில் அதி நுகர்வு பகுதியாகவும் (over exploited) நிலத்தடி நீர் செறி வூட்டு மண்டலத்தில் Highly favourable for recharge மண்டலத்திலும் அமைந்துள்ள தால், விரிவான தள ஆய்வு செய்து, மதிப்பீடு தயாரிக்கப் பட்டு, முன்னுரிமை அடிப்படை யில் நிதிநிலை மைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்

இப்படி ஏற்பட்ட உடைப்பு களை சரி செய்வதற்கு நாங்கள் இரண்டு விதமான பணிகளை செய்கிறோம். ஒன்று, தற்காலிக மான பணிகள்; இன்னொன்று நிரந்தரப் பணிகள். ஆனாலும், உறுப்பினருக்காகவே, நிரந்தரப் பணியாக முடித்துத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப் படும்.

தடுப்பணை உடைந்து 5 பேரை அடித்து சென்றுவிட்டது என்றால், அது பெரிய ஆச்சரிய மாக இருக்கிறது. ஏனென்றால், தடுப்பணையில் எவ்வளவு தண்ணீர் நிற்கும்; அது எவ்வளவு என்று எனக்குத் தெரியும். ஒரு நபரைக்கூட அடித்துச் செல்லாது. ஆனால், 5 பேரை அடித்துச் சென்றுவிட்டதாகச் சொல்கிறீர் கள். இருந்தாலும், அப்படி சொன் னால்தான், weight ஆக இருக் கும் என்பதற்காக சொல்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கை நிறை வேற்றப்படும்.

பொதுவாக உறுப்பினர்கள், என்னையும் சேர்த்தே சொல்லு கிறேன். பெரிய கோரிக்கை தங் கள் தொகுதியிலே தடுப்பணை கள் அமைத்து, தண்ணீரை தேக்கி, அதை recharge செய்து விவசாயத்திற்கும், கால்நடைக ளுக்கும், ஏன் குடி நீருக்கும்கூட பயன்படுத்துவதற்கு வகை செய்ய வேண்டுமென்ற எண் ணம் இருப்பதனால்தான், ஏற்கெ னவே ஒதுக்கப்பட்ட நிதிநிலை களிலிருந்து கூடுமானவரையில், இந்தத் தடுப்பணைகளைக் கட்டு வதற்கு முயற்சிக்கி றோம். ஆகையினால், முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றி நான் பேச இருக்கிறேன். வேறு திட்டங் கள் எழுப்பப்படாவிட்டாலும், குறிப்பாக தமிழ்நாட்டில் இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குள் ளாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுகிற தடுப்பணைகளை யாவது கட்டி முடிக்க வேண்டு மென்று நான் முடிவெடுத் திருக் கிறேன். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

நான் மறுபடியும் சொல் கிறேன். இந்தத் தடுப்பணை கள் கட்டுவதுதான் நம்முடைய எம்எல்.ஏ.களுடைய கோரிக்கைக ளிலே முக்கியமாக இருக்கிற காரணத்தால், எந்தெந்த தொகு தியிலே தடுப்பணைகள் கேட்கி றார்கள் என்று பார்த்து, எது சாத கமானது என்பதையும் அரசுக்கு தெரிவித்து, அவற்றை இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் கட்ட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் பேசி நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னேன். ஆக, இவ்வளவு தெளிவாக நான் சொன்ன பிற கும், அங்கு ஒரு தடுப்பணை கட்ட முடியுமா என்று கேட்கிறார் கள். எல்லா கேள்விகளுக் கும் இந்தப் பதிலே போதுமானது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி – சோமாஸ்பாடி கிராமத்தில் உள்ள

மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கோரிக்கை !

சென்னை, ஜூன் 26-

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, சோமாஸ்பாடி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும் என்று சட்டப்பேரவை யில் கேள்வி நேரத்தின்போது பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-

கு.பிச்சாண்டி: என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, சோமாஸ்பாடி கிராமத்தில் இருக் கின்ற மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும் என்ற அங் குள்ள மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், அமைச் சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலேயே அதுகுறித்து அறிவிப்பு வெளியிடுவார்களா?

மேலும், அருள்மிகு நெல்லை யப்பர் கோயிலில் தேரை வடம் பிடித்து இழுத்தபோது, கயிறு சரியில்லாமல் இருந்தது என்று அங்குள்ள பத்திரிகை மற்றும் தொலைக்காட்சியில் செய்திகள் வந்தன. ஆனால், அதற்கு இரும் புச் சக்கரம் மாற்றப்பட்டிருக்கிறது. அங்கு இரும்பு சக்கரம் மாற்றியது போன்று, திருவண்ணாமலை கோயிலில் இரும்புச் சங்கிலி இருப்பதைப் போன்று, அனைத் துத் திருக்கோயில் களின் தேரோட் டங்களிலும் இரும்புச் சங்கிலி களைப் போட்டு தேரை இழுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என் பதையும் அறிய விரும்புகிறேன்.

பி.கே.சேகர்பாபு: ஆசியா விலே இருக்கின்ற மிகப்பெரிய தேர்களில் மூன்றாவது தேர் அத் தேராகும். 28x28 என அகலம், நீளம் மற்றும் 80 அடி உயரம் கொண்டது அந்தத் தேர். கடந்த 9 நாள் உற்சவத்தின் இறுதி நாளான நேற்று தேரை வடம் பிடித்து இழுக் கின்ற நிகழ்ச்சி நடைபெற்றது. தேரின் வடத்தை பின்னால் இருந்து நெம்புகோல் தருவதற்கு முன்பாக பக்தர்கள் பக்திப் பரவ சத்தோடு ஒட்டுமொத்தமாக இழுத் ததன் காரணமாக அந்தத் தேரின் வடம் அறுந்தது. அதற்கு மாற்றாக திருச்செந்தூர் தேர் வடம் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தேர் வடத்தை உடனடியாக இணைத்து, நேற்று இரவு 9.30 மணியளவில் 5 சுவாமிகளும் ஊர்வலமாக எடுத் துச் செல்லப்பட்டு, வெற்றிகரமாக தேர் நிலையை அடைந்தது என் பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எல்லா தேர்களுக்கும் தேரினுடைய இணைப்புப் பகுதி யில் இரும்புச் சங்கிலி இருக்கும். பக்தர்கள் நீளமாக வடம் பிடிக்க வேண்டியிருக்கிறது. இந்த நெல் லையப்பர் தேர் என்பது 450 டன் எடை கொண்ட தேராகும்.

அந்தத் தேரை இழுப்பதற்கு வடம் எப்பொழுதும் கயறினால் தான் நீளமாக இழுத்துச் செல்ல முடியும் என்ற காரணத்தினால் தான் அனைத்து திருத்தேர்களிலும் வடம் அதிக எடைக் கொண்ட தேருக்கு கயற்றினால்தான் பின் னப்படுகிறது. நேற்று நடைபெற்ற அந்த உற்சவத்தில், நம்முடைய தீயணைப்புத் துறை, பொதுப் பணித் துறை வடத்திற்கும், தேருக் கும் சான்றிதழ் அளித்த நிலையில் தான், அந்தத் தேர் வீதி உலா விற்கு எடுத்து வரப்பட்டது. அவர் கோரியபடி எந்தெந்தத் திருத்தேர் களுக்கெல்லாம் சங்கிலிகள் தேவையோ, அவற்றிற்கு பொருத் தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கூறிய திருக்கோயில் இந்த ஆண்டு திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த ஆட்சி ஏற் பட்ட பிறகு 8,624 திருக்கோயில் களுக்கு மண்டல குழு, மாநில குழு, தொல்லியல் குழு அனுமதி பெற்று அதிகளவில் ஆயிரக் கணக்கான திருக்கோயில் களுக்கு அனுமதியளித்த ஆட்சி, தமிழ் நாடு முதல்வர் தலைமையில் இருக்கின்ற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கோரிய அந்தத் திருப்பணியும் எடுத்துக்கொள்ளப்படும் என்ப தைத் தெரிவித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், நேற்றையதினம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சி. ஏற்கெனவே 150 ஆண் டுகள் கடந்த சீத்தனாஞ் சேரி திருக்கோயிலினுடைய திருத்தேர் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் தேர் வீதி உலா நடத்தப்பட்டது. விழுப்புரத்திலே அதேபோல், 100 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட் டில் இல்லாமல் இருந்த திருத்தேர் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட் டது. நேற்றைய ஒரு மகிழ்ச்சி, அன்றைக்கு ஓடாத திருத்தேரை, திருவாரூர் ஆழித் தேரை முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள், தேரை ஓட்டி புகழ்ப் பெற்றார். இன் றைக்கு ஓடாமல் இருந்த கண்ட தேவி தேர், பல்வேறு இன மக்கள் ஒன்று திரட்டி ஒரு சேர அவர்களை ஒற்றுமைப்படுத்தி திராவிட மாடல் ஆட்சியின் முத்தாய்ப்பாக நேற் றைக்கு கண்டதேவி திருத்தேரை 18 ஆண்டுகளுக்குப் பிறகு ஓட்டிய பெருமை முதல்வர் அவர்களையே சாரும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் உறுப்பினர் தேர் சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால், இதனையும் தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இவ்வாறு விவாதம் நடை பெற்றது.

புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தின் முன் – அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக நடக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து 'இந்தியா' கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டன முழக்கமிட்டனர். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல்காந்தி, கழகப் பொருளாளர், மக்களவைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். அப்போது அவர்கள் அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தை தங்கள் கையில் வைத்துக் கொண்டிருந்தனர்.

அரசியல் சாசனத்திற்கு எதிராக செயல்படும்

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம்!

'இந்தியா' கூட்டணி போராட்டம்!

புதுடெல்லி, ஜூன் 26 –

அரசியல் சாசனத்திற்கு எதிராக செயல் படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

18வது மக்களவையின் தற்காலிக சபா நாயகராக, தகுதிவாய்ந்த மூத்த உறுப்பின ரான கொடிக்குனில் சுரேஷை ஒன்றிய பா.ஜ.க. அரசு நியமிக்கவில்லை.

இந்நிலையில் மக்களவை கூட்டத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. அப்போது, ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாடாளு மன்றத்திற்குச் சென்றனர்.

தொடர்ந்து, அரசியல் சாசன நடைமுறை களுக்கு எதிராக செயல்படும் பா.ஜ.க. கூட் டணி அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளு மன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட னர். இப்போராட்டத்தில், சோனியா காந்தி, ராகுல்காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, கனிமொழி கருணாநிதி, டி.ஆர்.பாலு உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் கலந்துகொண்டனர்.

அப்போது, அரசியலமைப்பு சாசன புத்தகத்தை கையில் ஏந்தியபடி, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.